


ஆயுதபூஜை விஜயதசமி திருநாள் நல்வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்

செல்: 9025161717

ராம் சாய் ஹோட்டல்

(சைவம்)






எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில்
சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.

aanmeegamalar.com

## கன்னியர்களுக்கு உகந்த நான்கு வகையான நவராத்திரி

காளையர்க்கு ஓரிரவு சிவராத்திரி அல்லது வைகுண்ட ஏகாதசி என்பார்கள் ஆனால் கன்னியர்களுக்கு ஒன்பது இரவு நவராத்திரி என்பார்கள்.

நவராத்திரி என்றால் "ஒன்பது இரவுகள்" என்று பொருள். மகாளய அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது நாட்கள் நவராத்திரி எனப்படுகிறது.

இந்த நவராத்திரியும் நான்கு விதமாக பெண்கள் கொண்டாடுவது வழக்கம்.

அதாவது ஆண்டிற்கு நான்கு நவராத்திரிகள் உண்டு.

சக்தியைச் சித்திரை மாதத்தில் வழிபடுவது வசந்த நவராத்திரி எனப்படும்.

ஆனி, ஆடி மாதத்தில் வரும் நவராத்திரி ஆஷாட நவராத்திரியாகும்.

புரட்டாசி மாதத்தில் வழிபடுவது பாத்ரபத நவராத்திரி அல்லது சாரதா நவராத்திரி எனப்படும். புரட்டாசி மாதம் அமாவாசை அடுத்த நாள் முதல் வரும் நவராத்திரியே மிகப் பிரதானமாக எல்லோரும் கொண்டாடுகிறார்கள். புரட்டாசி மாதத்தின் வளர் பிறையில் பிரதமை திதியில் ஆரம்பித்து ஒன்பது திதியுடன் பத்தாவது திதியான தசமி திதியுடன் நிறைவுபெறுகிறது

தை மாதத்தில் கொண்டாடப்படுவது சியாமளா நவராத்திரி. (தை மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள்).

## நவராத்திரி பூஜை நேரமும் விரதமும்

நவராத்திரி விழா. நவராத்திரி விழா இரவு நேரத்தில் தான் (மாலை 6 முதல் 9 மணி வரை) பூஜை செய்யப்படும். இந்த பூஜை தேவர்கள் செய்யப்படுவதாக கருதப்பட்டு பெண்கள் மாலை மற்றும் இரவில் நவராத்திரியை வழிபடுவார்கள்

நவராத்திரி விரதம்:

நவராத்திரியானது இந்து மக்களால் எந்த நாட்டில் இருந்தாலும் கொண்டாடப்படும் ஒரு விரத முறை எனலாம்.

நவராத்திரி விரதங்களும் பல வகைகளைக் கொண்டுள்ளன. இந்த ஒன்பது நாட்களிலும் சிலர் தண்ணீர் மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள், சிலர் பழங்களை சாப்பிடுகிறார்கள், சிலர் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிடுகிறார்கள்.

வட இந்தியா பகுதியில் நவராத்திரி விரதத்தின் போது கோதுமை மற்றும் அரிசி போன்ற வழக்கமான தானி யங்கள் அனுமதிக் கப்படுவ தில்லை.

ஆனால் தென்னிந்தியாவைப் பொறுத் தவரை விரத காலங்களில் இரவு நேரத்தில் சாதத்தை தவிர்த்து இட்லி, தோசை, இடியாப்பம் போன்ற எளிமையான உணவுகளை எடுத்துக் கொள்கின்றனர்.

மேலும் நவராத்திரி விரதத்தின் போது அனைத்து வகையான பழங்களையும் சாப்பிட லாம். சிலர் இந்த ஒன்பது நாட்களும்பழங்கள் மற்றும் பால் மட்டுமே உண்டு விரதமிருப்பார்கள்.

நவராத்திரி விரதத்தின் போது, பெரும்பாலான மக்கள் காய்கறிகள் உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளி இனிப்பு உருளைக்கிழங்கு, சூரன் கிழங்கு, பூசணி, கீரை, தக்காளி, வெள்ளரி, கேரட் போன்றவற்றை உட்கொள்கிறார்கள்.

நவராத்திரி விரதத்தின் போது பால் மற்றும் பால் பொருட்கள், உட்கொள்ளப்படுகின்றன.

வெங்காயம் அல்லது பூண்டைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும். அசைவம், மது, புகை ஆகியவையும் தவிர்க்க வேண்டும்.

## நவராத்திரி பண்டிகை உருவானது எப்படி?

எருமை உருவம் கொண்ட அரக்கிக்கும் கம்பன் என்பவனுக்கும் பிறந்தவன் தான் மகிசாசூரன் ஆவான். அதனால் தான் மனித உடலுடனும் எருமைத் தலையுடனும் பிறந்தான்.

இவன் பிரம்மனை குறித்து பல ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து தனக்கு யாராலும் மரணம் நேரக் கூடாது, என்றும் அப்படி நேர்ந்தால் அது ஒரு பெண்ணால் தான் இருக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான்.

இதன்பின் அவன் தேவர்களைத் துன்புறுத்தத் துவங்கினான்.

அன்னை சக்தி பெண்ணுருவம் பூண்டு தேவர்களை காக்க பூமியில் பிறந்தார். சக்தி தேவி மகிசாசூரனுடன் போர் புரிந்து மகிசாசூரனின் எருமைத் தலையைத் தனது சக்கரத்தால் வெட்டி வீழ்த்தினார்.

தேவர்கள் மகிழ்ந்தனர். மகிசாசூரனிடம் போராடிப் போர் செய்து தேவ லோகத்தையும், பூலோகத்தையும் காப் பாற்றியதால் "மகிசாசுரவர்த்தினி" என்று சக்தியைப் போற்றினார்கள். ஒன்பது நாள் போர் செய்து பத்தாவது நாள் தேவி வெற்றி பெற்றதால் பத்தாம் நாள் விஜயதசமி என்று கொண்டாடப்படுகிறது.



## பெண்களுக்கான கொண்டாட்டங்கள்

நவராத்திரியின் தனிச்சிறப்பே இது முழுக்க முழுக்க பெண்களுக்கான பண்டிகையாகும்.

அம்பாளுக்குரிய பண்டிகைகள் எவ்வளவோ இருந்தாலும், அவற்றுள் முக்கியமானது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் மிகச் சிறப்பு வாய்ந்த நவராத்திரி விழாதான்

இந்த நவராத்திரி பண்டிகை புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமையில் தொடங்கி விஜய தசமியில் நவராத்திரி முடிகிறது.

முதல் ஒன்பது நாட்களில் முப்பெரும் தேவி யரை வழிபடவேண்டும்.

- முதல் மூன்று நாட்கள் துர்க்கையின் வழிபாடு.
- நடுவில் உள்ள மூன்று நாட்கள் லட்சுமி வழிபாடு.
- கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி வழிபாடு.

முப்பெரும் சக்திகளில், ஒவ்வொரு சக்திக் கும் மும்மூன்று அம்சங்கள் உள்ளன.

**துர்க்கை:** மகேசுவரி, கௌமாரி, வாராகி.

**இலட்சுமி:** மாகா லெட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி.

**சரஸ்வதி:** சரஸ்வதி, நாரசிம்மி , சாமுண்டி.

நவராத்திரியின் போது இந்த ஒன்பது தேவியர்களையும் முறையாக வழிபடுகிறோம். ஒரு தேவியை முதன்மையாகவும், மற்றவர் களைப் பரிவார அம்ச தேவதைகளாகவும் கொண்டாடுகிறோம்.

சரஸ்வதி பூஜை சிரவணம் என்ற நட்சத்திரம் உச்சமாகும் நாளில் நிறைவு பெறுகிறது. ஆயுதபூஜையாகவும் கொண்டாடுகின்றனர்.

நவராத்திரியின் எட்டாம் நாளை மகா அஷ்டமி அதாவது துர்க்காஷ்டமி என்றும், ஒன்பதாம் நாளை மகா நவமி என்றும் கொண் டாடுகிறோம்

மகிசாசுரனுடன் 9 நாட்கள் போரிட்ட தேவி, பத்தாம் நாள் அவனை வதம் செய் தாள். இந்நாளே விஜய தசமி – வெற்றியின் திருநாள் குழந்தை கள் கல்வியினை கற்க இன்றுதான் ஆரம் பிப்பார்கள். இன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் வெற்றி தரும் என்பது நம்பிக்கை.

நவராத்திரி முதல் தினம் தொடங்கி ஒன்பது நாட்கள் முழுவதும் காலையில் நீராடி சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை போன்ற பெண் தெய்வங்களுக்குப் பூச்சூடி, கற்பூரம், பழம் இதனுடன் நெய்வேத்தியம் வைத்து தெய்வங் களுக்குரிய மந்திரங்களைக் கூறி வணங்க வேண்டும்.

நவராத்திரியின் ஒன்பது நாட் களில் ஒவ்வொரு வண்ணம் முக்கியத்துவம் பெறும். அந்தந்த நாளுக்கான நிறத்தில் ஆடைகள் அணிந்து அன்னையை வழிபட்டு மகிழ்வர்.

## நவராத்திரியின் கருத்து

மகா சங்கார (பேரழிவுக்) காலத்தின் முடிவில், இறைவன் உலகத்தைச் உண்டாக்க விரும்பினபோது இச்சை என்ற சக்தியும், அது எவ்வாறு தோன்றியது என்று அறிந்தபோது ஞானசக்தியும் தோன்றின; பின் கிரியா சக்தியினால் இறைவன் உலகைப் படைத்தான் என்ற கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது. (இச்சை = விருப்பம், ஞானம் =அறிவு, கிரியா = செய்தல், ஆக்கல்)

## பெண்பிள்ளைகளை வணங்கும் பூசை

நவராத்திரி காலத்தில் குமாரி பூசை இன்றியமையாததாகும். இரண்டு வயதிற்கு மேல் பத்து வயதிற்கு உட்பட்ட குமாரிகளே பூசைக்கு உரியவர்கள்.

முதல் நாள் தொடங்கி ஒவ்வொரு நாளும் ஒரு குமாரியாக முறையே குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சாண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என்ற பெயர்களால் பூசிக்கப்படவேண்டும்.

குமாரிகளுக்கு ஆடை, அணி, பழம், தாம்பூலம், மலர், சீப்பு, கண்ணாடி முதலிய மங்களப் பொருட்கள் மஞ்சள் குங்கும, தட்சணை கொடுத்து உப சரித்து அறுவகை சுவைகளுடன் அமுது செய்வித்தல் வேண்டும்.




அருள்மிகு கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் 95வது ஆண்டு குருபூசை விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்.

நாள்: 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30-12.00 மணி

ஸ்ரீ மீனாட்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
பவித்ரா ரீ-வைண்டிங் ஒர்க்ஸ்
கப்பலூர், சிட்கோ, மதுரை -08
9384729317 / 9842329650



.com aanmeegamalar.com aanmeegamalar.

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

## வடஇந்திய தசராவிழாவை மிஞ்சும் அளவில் நடைபெறும்

# குலசேகரன் பட்டினம் முத்தாரம்மன் தசரா திருவிழா

அற்புதங்கள் பல நிகழ்த்தும் அன்னை ஸ்ரீ முத்தாரம்மன் கோவில்!

அகத்தியரின் சாபத்தால் வர முனி என்ற முனிவர், எருமைத் தலையும், மனித உடலும் கொண்ட 'மகிஷ' உருவத்தில் அலையும்படி ஆனது. அசுர குலத்தில் பிறந்த மகிஷன், கடுமையான தவம் இருந்து சிவபெருமானிடமும், பிரம்மதேவரிடமும் பல வரங்களை பெற்றான். அந்த வரங்களின் காரணமாக அவன் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான்.

சிவபெருமான், பார்வதி தேவியை உதவி புரிய கோரினார். இதையடுத்து அன்னை தேவர்களுக்கும்,முனிவர்களுக்கு அபயம் அளிக்க முன்வந்தாள். பின்னர் மகிஷா சுரனை வதம் செய்வதற்காக ஒன்பது நாட்கள் தவமிருந்து, பத்தாம் நாளில் காளி வடிவம் எடுத்து மகிஷாசுரனை வதம் செய்தாள்.



### தசரா திருவிழா:

இந்த நிகழ்வை எடுத்துரைக்கும் விதமாக தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் ஆலயத்தில் 'தசரா திருவிழா' வெகு சிறப்பாக நடைபெறுகிறது. 10 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் முதல் 9 நாட்கள் அம்மன் தவம் செய்யும் நிகழ்வும், 10ம் நாளான விஜயதசமி அன்று, மகிஷாசுரனை அன்னை வதம் செய்யும் நிகழ்வும் நடைபெறுகின்றன. இந்த விழாவிற்காக பக்தர்கள் பலர் காப்பு கட்டி, பல்வேறு வேடங்கள் தரித்து அம்மனுக்கு விரதம் இருப்பது வழக்கமாக உள்ளது.

மைசூர், உத்தரப்பிரதேசம் போன்ற இடங்களில் நடைபெறும் தசரா விழாவைப் போன்று தமிழகத்தில் குலசேகரன் பட்டினம் முத்தாரம்மன் ஆலயம் சிறப்புக்குரிய இடமாக உள்ளது.

இந்த ஆலயத்தில் ஒரே பீடத்தில் வடக்கு திசை நோக்கி ஈசன் ஞான மூர்த்தீஸ்வரராகவும், அம்பாள் முத்தாரம்மனாகவும் சுயம்புவாக இருந்து அருள்பாலித்து வருகிறார்கள்.

தலவரலாறு:குலசேகரப்பாண்டியன் என்னும் மன்னனே இந்த ஊரை ஆட்சி செய்து வந்தார். மேலும் இந்த ஊரில் உள்ள அறம் வளர்த்த நாயகி சமேத கச்சி கொண்ட பாண்டீஸ்வரர் கோவிலையும் இந்த அரசனே கட்டி முடித்துள்ளான்.

விநாயகர் கோவில், விண்ணகர பெருமாள் கோவில், சிதம்பரேஸ்வரர் கோவில், வீரகாளி, பத்ரகாளி, கருங்காளி, முப்புடாதி, உச்சினி, மகாகாளி, அங்காளம்மன், ஈஸ்வரி அம்மன், வண்டி மறித்த அம்மன்என அஷ்ட காளி கோவில்களும் குலசையில் அமைந்துள்ளன.

முத்தாரம்மன், ஞானமூர்த்தீஸ்வரரின் சுயம்பு விக்கிரகங்களை ஆரம்ப காலத்தில் வழிபட்டு வந்த பக்தர்கள், அம்மையப்பன் இருவரையும் பெரிய திருஉருவில் வழிபட விருப்பம் கொண்டனர். அப்போது கோவில் அர்ச்சகரின் கனவில் தோன்றிய முத்தாரம்மன், 'எங்கள் திருமேனியை கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி என்ற ஊரில் உள்ள சிற்பி சுப்பையா என்பவரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்' என கூறி மறைந்தாள்.

அம்மனின் அருளால் சிலையை செதுக்கிய சிற்பியிடம் இருந்து அம்மையப்பனின் சிலையைப் பெற்று வந்து 1934ம் ஆண்டு கருவறையில் பிரதிஷ்டை செய்தனர். பழைய சுயம்பு சிலைகள் தற்போது கருவறையின் அடியில் உள்ளதாக கூறப்படுகிறது. இத்தல கருவறையின் எதிரில் நின்றாலே ஆன்மிக அதிர்வுகளை பக்தர்கள் உணர்வார்கள்.

முத்தாரம்மனுக்கு எலுமிச்சை பழ மாலையும், செவ்வரளி மாலையும் உகந்தவையாகும். மூன்று வயதாகியும் சரியாக பேச்சு வராத குழந்தைகளை இந்த தலத்திற்கு அழைத்து வந்து பேச்சியம்மனுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபாடு செய்கின்றனர்.

இங்குள்ள பைரவரை அஷ்டமி நாட்களில் மாலை வேளையில் நெய் தீபம் ஏற்றி, வில்வ இலையால் அர்ச்சித்து, உளுந்துவடை மாலை சாற்றி வழிபட்டால் வறுமை அகலும். வளங்கள் பெருகும்.

பாண்டியநாடு சித்தா வர்மா மருத்துவமனை
மற்றும் ஆராய்ச்சி மையம்
Unit of Pandiyanadu Trust

பாண்டியநாடு பாரம்பரிய மருத்துவம்
பாண்டியர் கால மருத்துவ மரபுகளைத் தொடர்ந்து,
இயற்கை மூலிகைகள், வர்ம சிகிச்சை, சித்த மருந்துகள்
ஆகியவை மூலம்உடல், மனம், உயிர் ஆகிய மூன்றையும்
ஆரோக்கியமாக்கும் ஒரு முழுமையான சிகிச்சை மையம்.

- மரபணு சிகிச்சை
- வர்ம புள்ளி சிகிச்சை
- சித்த மூலிகை மருந்துகள்
- பெண்கள், குழந்தைகள், மூப்புவர் நோய்களுக்கு தனிச்சிகிச்சை

சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும் நோய்கள்

- இடுப்பு வலி,மூட்டுவலி
- முதுகுதண்டு வலி
- ஆஸ்துமா
- சைனசைட்டிஸ்
- குடல்புண்
- மூலம், பவுத்திரம்
- சர்க்கரை நோய்
- பக்கவாதம்
- சீறுநீரககல்
- சொரியாசிஸ்
- நரம்பு தளர்ச்சி
- மாதவிடாய் கோளாறு
- கருப்பை நீர்கட்டிகள்
- குழந்தையின்மை

சிறப்பு சிகிச்சை முறைகள்

- சிரோதாரா
- நீராவிக்குளியல்
- அப்பியங்கம் (MASSAGE)
- வர்மம் ,ஒற்றடம்
- இலை சிகிச்சை
- நவரக்கிழி
- அட்டை விடல்
- காரநூல் சிகிச்சை
- நேத்ர வஸ்தி
- ஹிஜாமா (CUPPING)

மேற்கண்ட நோய்களுக்கு நாடி பரிசோதனை மற்றும் அனைத்தும் நோய்களுக்கும் சித்த மருத்துவமுறைபடிஅரசு பதிவு பெற்ற மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்படும்.

Address
3/766 Muthuramalingapuram,
Padanthal,Sattur,
Virudhunagar - 626203

Dr.C.Nageshwari B.S.M.S.Dvm
9345120316

SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
DOMESTIC & INTERNATIONAL


SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
- KOLLUR, UDUPI TOUR
- KERALA TEMPLE TOUR
- SHIRIDI, MANTRALAYAM
- NAVAGRAHA TOUR
- KASI, GAYA, ALLAHABAD & PURI
- AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
- THIRUVANNAMALAI GIRIVALAM
- SRIPURAM GOLDEN TEMPLE
- SURUTAPALLI PRADASHOM
- SAKTHI TOUR
- THENNANGUR
- KANCHIPURAM & BALAJI DARSHAN











NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 9094279625 / 9444465924 e-mail: srijanaki.tours@gmail.com

malar.com aanmeegamalar.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் பாண்டிய மன்னர்கள் வழிபாடு செய்த தவ்வை (ஜேஷ்டா தேவி) சன்னதி

மதுரையில் உள்ள ஆறுபடை வீடுகளில் முதல் வீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஜேஷ்டா தேவி சன்னதி திறக்க வேண்டும் என பாண்டியர்களை தேடி பயண ஆய்வு குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கி.பி எட்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த பராந்தக நெடுஞ்சடைய பாண்டியன் மன்னரின் தளபதியாக சாத்தன் கணபதி மனைவி நக்கன் கொற்றி என்பவரால் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் ஜேஷ்ட்டா தேவி (எ) தவ்வை க்கு தனி சன்னதி எடுக்கப்பட்டது.

இந்த சன்னதி கம்பத்தடி மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள படிகள் கம்பத்தடி மண்டபத்தை ஆறுமுகசாமி மண்டபத்துடன் இணைக்கின்றன. இவ்வாசற்படிகளின் ஓரத்தில் கம்பத்தடி மண்டப மூலையில் சிறிய நுழைவாயில் ஒன்று உள்ளது. இந்நுழைவாயிலின் உள்ளே சுமார் 100 அடி நீளமுள்ள இருட்டான சுரங்கப்பாதை வழியில் சென்றால், அங்கு ஜேஷ்டா தேவியின் குடைவரைச் சிற்பத்தைக் காணலாம்.

ஜேஷ்டா தேவி இரண்டு கால்களையும் தொங்க விட்டு அமர்ந்த கோலத்தில் இருக்கையின் மீது உள்ளாள். இவளது வலக்கரம் தாமரை

மலரையும், இடக்கரம் தன் இடது புறமுள்ள தன் மகளின் வலது தொடையிலும் வைத்த நிலையில் காணப்படுகிறது. கச்சணியாத ப ருத்த மார்பையும், குண்டலங் களை உடைய காதுகளையும் காணமுடிகிறது.

இவருக்கு வலது புறத்தில் எருமைத் தலையையுடைய இவருடைய மகன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு அதே இருக்கையில் அமர்ந்துள்ளார். இரண்டு கரங்களில் வலது கரம் மட்டும் தண்டத்தைப் பிடித்த நிலையில் உள்ளது. இவளது இடது புறத்தில் இவளுடைய மகள் அமர்ந்துள்ளாள். இரண்டு கரங்களில் வலது கரத்தில் மட்டும் மலரை ஏந்தியுள்ளாள். இவளுடைய மார்பில் கச்சணியப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்டுள்ளன. பல நூறு ஆண்டுகளாக பூஜையில் இல்லாமல் இருந்ததாக அறிந்து கடந்த 2021 இல் பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு சார்பாக நேரடியாக ஆய்வு செய்தனர். கோயில் நிர்வாகம் அர்ச்சகர்கள் தினமும் பூஜை செய்வதாகவும் கும்பாபிஷேகம் முடிந்த பின்பு மக்கள் பார்வைக்கு அந்த சன்னதி திறக்கப்படும் என்றும் தெரியப்படுத்தி உள்ளனர். திருப்பரங்குன்றம் முருகன்

கோவிலில் மகா கும்பாபிஷேகம் கடந்த ஜூலை 14 ந்தேதி நடைபெற்றது.

அதே நேரத்தில் ஜேஷ்டா தேவியின் சன்னதி திறக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது இது குறித்து பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக் குழுவின் முதன்மை ஆய்வாளர் மணிகண்டன் அவர்கள் கூறும் பொழுது முற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது இந்த தவ்வை (எ)ஜேஷ்டாதேவி வழிபாடு இன்றளவும் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ஆனால் பாண்டியநாட்டில் தனிப்பெரும் சன்னதி கொண்டு குடவரை சிற்பமாய் காட்சியளிக்கும் தவ்வை வழிபாடு சற்று குன்றியே உள்ளது. சன்னதி திறக்கப்பட்டு மக்கள் அனைவரும் பார்வைக்கும் கொண்டு சென்றாள் மீண்டும் தவ்வை வழிபாடு உயிர்பெறும்.

இந்த சன்னதியின் அமைப்பு நம்மை பிற்காலத்துக்கு கொண்டு செல்லும் அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது 100 மீட்டர் தொலைவில் குகையில் பயணம் மக்கள் ஆர்வமாகவும் வந்து வணங்குவார்கள். ஆகவே மகா கும்பாபிஷேகம் அன்று சன்னதியை பக்தர்கள் வழிபாடு செய்ய திறக்க வேண்டும். நம் பாண்டியர்கள் நமக்காக விட்டுச் சென்ற பல சுவடுகளை நாம் காக்க வேண்டியது நம் கடமை என்று கூறினார். விரைவில்

பாண்டிய மன்னர்கள் வழிபாடு செய்த ஜேஷ்டா தேவி சன்னதி பக்தர்கள் வழிபாடு செய்ய வசதிகள் ஏற்படுத்த வேண்டும். என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## சென்னையில் ஆன்மிக அன்பர்கள் நம்பிக்கை பெற்ற
## ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ்





இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற ஆன்மிக சுற்றுலா தலங்களுக்கு ஆன்மிக பக்தர்கள் மற்றும் மூத்த குடிமக்களை இறை அருளால் அழைத்து சென்று ஆன்மிக அன்பர்களின் நம்பிக்கை பெற்ற சுற்றுலா நிறுவனமாக ஸ்ரீ ஜானகி டூர்ஸ் நிறுவனம் உள்ளது.

ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் சாதனை படைத்து வருகி அந்த வகையில் சுற்றுலா துறையில் சாதனை படைத்து வரும் ஸ்ரீ ஜானகி டூர்ஸ் டிராவல்ஸ் நிறுவனத்தினை சிறப்பான முறையில்நடத்தி வரும் நிர்வாக இயக்குனர்களில் ஸ்ரீபிரியா ரமேஷ் ஒருவர். சுற்றுலா தலங்களை தேர்ந்தெடுத்து முன்னேற்பாடாக வசதிகளை ஆய்வு செய்வது மற்றும் அலுவலகத்தை நிர்வகிப்பது சுற்றுலாக்களை வழி நடத்தி செல்வது என அனைத்து துறைகளிலும் இவரின் பங்கு முக்கியமாக உள்ளது. ஆன்மீக சுற்றுலா என்றாலே ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ் என்ற பெயர்தான் நினைவுக்கு வரும். வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவை பெற்று சிறப்பாக சுற்றுலாக்களைநடத்தி வருகிறது ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ். அந்தமான் சுற்றுலா மற்றும் இந்திய அளவில் மிக முக்கியமான ஆன்மிக சுற்றுலா ஆலயங்கள். புண்ணிய ஸ்தலங்கள், தீர்த்த யாத்திரைகள், தவிர இந்த ஆண்டு வாடிக்கையாளர்க ளுக்கு புதிய அனுபவமாக அந்தமான் இன்ப சுற்றுலா அழைத்து சென்றுள்ளனர். அனைத்து வசதிகளுடன் அளித்து வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றுள்ளது.

தற்போது ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், பெல்ஜி யம், நெதர்லாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, வாடிகன் சிட்டி உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுலா செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுத்து உள்ளனர். இந்த சுற்றுலா பயணம் வருகிற ஏப்ரல் மாதம் 23ந் தேதி தொடங்குகிறது.

12 நாட்கள் இரவு மற்றும் 13 நாட்கள் பகல் என்ற திட்டமிடலுடன் செல்லும் இந்த சுற்றுலாவுக்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.3,77,900 என்று நிர்ணயித்துள்ளனர். சிறப்பான இடங்களை தேர்வு செய்து அனைத்து வசதிகளும் அளிப்பது. குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவை. முதியோர், குழந்தைகளுக்கு தனிப்பட்ட கவனம் இவைதான் எங்களது வெற்றிக்கு மூல காரணம். பெண்கள் தன்னம்பிக்கை யுடன் செயல்பட்டால் வெற்றி உறுதி. என்று ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ் இயக்குனர்கள் ரமேஷ், ஸ்ரீபிரியா ரமேஷ் ஆகியோர் தெரிவித்தனர். ஆன்மிக சுற்றுலா தொடர்புக்குர்புக்கு: 90942 79625

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை
M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்
A.T.T.லாட்ஜ்
அகிலா காம்ப்ளக்ஸ்






அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்

L.சுரேஷ்

S.அன்னாமலை
பைபாஸ்ரோடு, மானாமதுரை
மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்
செல்: 98424 68215 / 73737 68215

aanmeegamalar.com

# வரம் தரும் அம்பிகையர்கள்

விழுப்புரம் மாவட்டம், வானூரில் 72 அடி உயர பிரத்யங்கிரா தேவியை தரிசிக்கலாம்.

❖●❖

திருநெல்வேலி, பாளையங்கோட்டையில், எந்தக் கொடிய நோயையும் தீர்க்கும் ஆயிரத்தம்பாள் அருள்கிறாள்.

❖●❖

கும்பகோணம்,திருநறையூரில் வைகாசி மாத அமாவாசைக்கு அடுத்த வெள்ளிக்கிழமையிலிருந்துசமய புரம் மாரியம்மன், பத்து நாட்கள் ஆகாச மாரியாய் காட்சி தந்து பின் சமயபுரம் செல்வதாக ஐதீகம்.

❖●❖

கோவை சாலையில், வயலூரில் சக்திபுரி கோவிலில் இச்சா,ஞான, கிரியா சக்திகளின் சங்கமமாக பரா சக்தியாக அருள்கிறாள்.

❖●❖

சிவகங்கை, தாயமங்கலத்தில் அருளும் முத்து மாரிக்கு பங்குனி மாதம் பொங்கல் வைக்கிறார்கள். கோவிலுக்கு வர இயலாதவர்கள், தத்தமது வீட்டிலேயே அன்னைஉள்ள திசை நோக்கி பொங்கல் வைக்கிறார் கள்.

❖●❖

திருச்சி உறையூரில் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் அருகேயுள்ள ஜெய காளிகாம்பாளுக்கு வெள்ளிக்கிழமை ராகுகாலத்தில் நிவேதித்த இஞ்சிச்சாறு,தேன் கலவை பிரசாதத்தை, சரியாக பேச்சு வராத குழந்தைகளின் நாவில் தடவ அவர்கள் சரளமாக பேசும் அற்புதம் நிகழ்கிறது.

❖●❖

கும்பகோணம், சாரபரமேஸ்வரர் ஆலயத்தில் விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி துர்க்கை,சிவ துர்க்கை மூவரையும் ஒரே சந்நதியில் தரிசிக்கலாம்.

❖●❖

மதுரைஅழகர் கோவில் சாலையில் உள்ள முத்தப்ப நாராயணர் கருமாரி



திருக்கோவிலில் 65 அடி உயர சுதை வடிவில் பதினாறு திருக்கரங்களுடன் பக்தர்களின் நோய்களை தீர்க்கிறாள் ஆயுர்தேவி.

❖●❖

மன்னார்குடிகும்பகோணம் பாதையில், பூவனூர் சதுரங்கவல்லபநாதர் ஆலயத்தில் சாமுண்டீஸ்வரி தேவி அருள்பாலிக்கிறாள்.விஷக்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் அங்கே தரப்படும் கயிற்றை கையில் கட்டிக் கொண்டு நிவாரணம் பெறுகின்றனர்.

❖●❖

காஞ்சிபுரம்,கலவையில் அருளும் அங்காள பரமேஸ்வரி கோவிலில் பிரார்த்தனை நிறைவேறிய பக்தர்கள் தங்கள் புகைப்படத்தை ஃப்ரேம் போட்டு வைக்கிறார்கள்.

❖●❖

ஈரோடுஅந்தியூரில் ஆலய பத்ர காளியம்மன்,பக்தர்களின் கனவில் வந்து பலன் சொல்லி,குறை களைகிறாள்.

❖●❖

திருவாரூர்,ஆனந்தகுடி சோமேஸ்வரர் சந்நதியில் துர்க்கை தேவியும் எழுந்தருளியுள்ளாள்.இந்த இருவருக்கும் பூஜைகள் முடிந்த பின்பே அம்பிகை சோமகலாம்பிகைக்கு நடக்கின்றன.இந்த துர்க்கை கல்யாண வரம் அருள்பவள்.

❖●❖

கோவை அத்தனூர் மாரியம்மன் மகாமண்டபத்தில் உள்ள ஆண் பூத சிற்ப பகுதியில் பல்லி வாக்கு கேட்டால் காரிய வெற்றி என்றும், பெண்பூத சிற்பப் பகுதியில் கேட்டால் காரியத்தடை என்றும் நம்பிக்கை நிலவுகிறது.

❖●❖

தேனி, வீரபாண்டியில்ஆலயம் கொண்டுள்ள கௌமாரி யம்மன், சருமநோய் தீர்க்கிறாள்;மழலை வரம் அருள்கிறாள்.சித்திரைத் திருவிழாவில் தீச்சட்டி ஏந்தியும்,ஆயிரம் கண் பானை ஏந்தியும்,சேந்தாண்டி வேஷமிட்டும் நேர்த்திக் கடனை செலுத்துகிறார்கள் பக்தர்கள்.

❖●❖

திருமீயச்சூரில் லலிதா சகஸ்ர நாமத்தை இயற்றிய வஸின்யாதி வாக் தேவதைகள் காஞ்சி காமாட்சி கருவறையில் ஆதிசங்கரரால் நிறுவப் பட்ட யந்திரத்தில் அருள்கின்றனர். அம்மனுக்கான வழிபாடுகள் அந்த யந்திரத்திற்கே செய்யப்படுகின்றன.

❖●❖

திருக்கோவிலூர் திருவெண்ணெய்நல்லூர் பாதையில் உள்ள சின்னசெவலையில் காட்சி தரும் காளியை கம்பரும்,சடையப்பரும் வழிபட்டுள்ளனர். கம்பர் ராமாயணம் எழுதிய போது இந்த தேவி தீப்பந்தம் பிடித்ததாக தலவரலாறு சொல்கிறது.

❖●❖

திருவாரூர், குடவாசல், பருத்தியூரில் பண்ணையாரால் ஏமாற்றப்பட்ட விவசாயிக்காக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொன்ன அம்பிகையாய் சந்தனமாரியாக அருள்கிறாள்.

❖●❖

ஈரோடுகாங்கேயம் சாலை,அறச்சாலை தலத்தில்,அம்மன் உத்தரவு கேட்க 3 வெள்ளை நிறப்பூக்களும்,3 சிவப்பு நிறப் பூக்களும் அன்னையின் முன் திருவுளச்சீட்டாக பயன் படுத்தப்படுகின்றன.

❖●❖

திண்டிவனம் மயிலம் பாதை யில் உள்ள திருவக்கரையில்வக்ரகாளியாய் பராசக்திகொலுவிருக்கிறாள். வக்ராசுரனை அழித்த இந்த அம்பிகையை பௌர்ணமி நாளில் தரிசிக்க நம் வாழ்வில் ஏற்படும் வக்ரங்கள் விலகுவதாக ஐதீகம்.

❖●❖





உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203

A.L.S.ராமையாநாடார்-சன்ஸ்




மரம், ஓடு, சிமெண்ட், உரம் வியாபாரம்
236, மெயின்ரோடு மானாமதுரை




ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்



உயர்தர சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்
செல்: 9994675130/9443168202
9842468202/04574269905



S.நாகராஜ்
தலைவர், வீர அழகர் சாரிடபிள் டிரஸ்ட்



S.ராஜேந்திரன்

# ஆழ்வார்திருநகரியில் அற்புதங்கள் நிகழ்த்திய
# கட்டிக்குளம் சூட்டுக் கோல் மாயாண்டி சித்தர் சுவாமியின் மகிமை

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகா ஆழ்வார் திருநகரியில் அழகிய மணவாளபுரம் என்ற கிராமத்தில் பல்வேறு காலங்களில் அங்கு மடாலயம் அமைத்து தங்கி இருந்து பல்வேறு சித்து மகிமை செய்து வந்தார்.

ஆழ்வார்திருநகரில் வாழ்ந்த போது மாயாண்டி சுவாமி அன்ன காவடி எடுத்து அனைத்து சமுதாய வீடுகளுக்கும் சென்று அன்னம் யாசனமாக பெற்று மடாலயத்தில் வந்து அந்தக்காலத்தில் திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் மற்றும் நடை பயணமாக செல்வோருக்கு கொடுத்து வந்தார். அச்சமயத்தில் பல்வேறு வீடுகளில் எடுத்து வந்த அன்னமாக இருந்தாலும் அச்சமயத்தில் சமைக்கப்பட்ட அறுசுவை உணவு போல் இருந்தது


ஆழ்வார்திருநகரியை சேர்ந்த மாயாண்டி ஆசாரி என்பவர் தென்திருப்பேரையில் மாட்டுவண்டி பட்டறை தொழில் செய்து வந்தார். ஒரு சமயம் அன்று எந்தவித வேலையும் இல்லாமல் கையில் பணம் இல்லாத சூழ்நிலையில் வீடு திரும்பி கொண்டிருந்த மாயாண்டி ஆசாரியின் மாட்டு வண்டியில் மாயாண்டி சுவாமி அமர்ந்து கொண்டார். அப்போது அவரிடம் மாயாண்டி இன்று எனக்கு அமுது உண்ண வேண்டும் என மாயாண்டி சுவாமி கேட்டார். என்னசெய்வதென்று மாயாண்டி ஆசாரி பணம் ஏதும் இல்லாத நிலையில் சுவாமிக்கு எப்படி உணவு கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தார், அவரது வண்டியில் இருந்து மறைந்த மாயாண்டி சுவாமி மாயாண்டி ஆசாரியின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியாரிடம் அம்மா இன்று உன்னுடைய வீட்டிற்கு உணவு அருந்த வருகிறேன். ஏற்பாடு செய்துவை என்று கூறி வெளியே சென்றார்.

பின்னர் வீடு வந்து சேர்ந்த மாயாண்டி ஆசாரியிடம் அவரது மனைவி சுவாமி வந்து சென்ற விபரத்தை கூறினார், இருவரும் பேசி என்னசெய்வதென்று திகைத்த போது அவர்களது வீட்டின் பின்புறத்தில் அறுசுவை உணவு நறுமணம் வீரியது. அப்போது மாயாண்டி சுவாமி வீட்டிற்கு வந்தார். அவர்கள் என்னசெய்வதென்று தெரியாமல் கையை பிசைந்து கொண்டிருந்த வேளையில் வீட்டின் உள்ளே சென்று பார் என மாயாண்டி சுவாமி கூறினார். சென்று பார்த்த மாயாண்டி ஆசாரியின் மனைவி ஆச்சர்யம் கலந்த மெய்சிலிர்க்கும் விதத்தில் உணவு பதார்த் தங்கள் நிறைந்து வழிந்தன. அதனை மாயாண்டி சுவாமிக்கு படைத்து மகிழ்ச்சி அடைந்தனர்.

**பரிசலை (படகை) நிறுத்திய மாயாண்டி சுவாமி:** குரங்களி அருகே உள்ள மங்கலகுறிச்சி தாமிரபரணி ஆற்றை கடப்பதற்கு பரிசலை பயன் படுத்தி வந்தனர். ஒருநாள் பரிசலில் மாயாண்டி சுவாமிகள் ஏறி குத்துகாலிட்டு அமர்ந்திருந்து பயணம் செய்தார். அப்போது படகோட்டி மாயாண்டி யிடம் காக கேட்டார். காசு இல்லாமல் மவுனமாக மாயாண்டி சிரித்தார். அப்போது படகோட்டி அவரை கீழே இறங்கிவிட்டார். பரிசல் புறப்பட்டு சென்றது. நடுவழியில் சென்றபோது பரிசல் நின்றுவிட்டது. என்னசெய்வதென்று படகோட்டி திகைத்தார். அப்போது எதிர்கரையில் இருந்து மாயாண்டி கைகாட்டி படகோட்டியை கூப்பிட்டார். உடனே பரிசல் செல்ல ஆரம்பித்தது. மறுகரைக்கு சென்ற படகோட்டி சுவாமியை கண்டு வியந்து மன்னிப்பு கேட்டார்.

ஒரு முறை திருச்செந்தூர் நடைப்பயணக் குழவில் வந்த யாத்ரிகர் ஒருவருக்குக் கடும்யான தாகம் எடுத்ததுதண்ணீரைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தார். அப்போது ஒரு கிணற்றைப் பார்த்தார். அந்தக் கிணற்றில் தண்ணீ அடிமட்டத்தில் இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார். தண்ணீர் இறைக்க வாளி இருந்தது. ஆனால் கயிறு இல்லை ஆதியாத்தவன் மாயாண்டி சுவாமிகள் அல்லவா? அப்போது சுவாமிகள் அங்கே வந்தார். "என்ன அப்பு.. தண்ணீ தாகம் எடுக்குதா? இந்தா, இந்தத துண்டைக் கட்டி வாளியைக் இற்றுக்குள் இறக்கு தாகம் தீரும்" என்றார்;

யாத்ரிகருக்கோ ஆச்சரியம் கிணற்றிலோ அடி ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை எடுக்க இந்தத் துண்டு எப்படி உதவும் என்று குழம்பினார். இருந்தாலும், இந்த சுவாமிகள் இப்படிச் சொல்கிறாரே என்று வியந்து துண்டைப் பெற்றுக்கொண்டார். அதை வாளியில் கட்டினார். மாயாண்டி சுவாமிகள் புன்னகைத்தபடி இந்த யாத்ரிகரைப் பார்த்துக்கொண்டிருந்தார். துண்டால் முடியப்பட்ட வாளியைக் கிணற்றுக்குள் இறக்கினார். என்ன ஆச்சரியம் அந்தத் துண்டு எந்த அளவுக்கு நீளமாக இருந்ததோ, அந்த மட்டத்துக்குக் கிணற்றின் அடியில் இருந்த தண்ணீர் பெருகி மெள்ள மெள்ள மேலே வந்திருந்தது.




தண்ணீரை எடுத்தார். தாகம் தணித்தார். பிறகு, சுவாமிகளை நன்றிப்பெருக்குடன் பார்த்துக் கைகப்பி வணங்கினார்.

ஒரு சமயம் வெள்ளைக்காரத் துரை ஒருவருக் குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. எத்தனையோ வைத்தியம் பார்த்தும் துரையின் அவஸ்தை தீரவில்லை. ஒரு நாள் பணி நிமித்தம் அவர் ஆழ்வார்திருநகரி வந்தார். ஆனால், வந்த இடத்தில் வயிற்று வலியின் கொடுமை மேலும் அதிகரித்தது. வலி தாங்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக்கொண்டு தவித்தார் துரை. அப்போது அங்கே வந்தார் நம் சித்த புருஷரான மாயாண்டி சுவாமிகள். "என்ன அப்பு வயித்து வலி தாங்க முடியலியா?" என்று கேட்டார். துரையும் தன்னை ஒருவர் இப்படி அன்புடன் விசாரிக்கிறாரே என்று "ஆமாம்" என்றார்.

அங்கே அருகில் ஒரு கிணறு இருந்தது. அதன் அருகே சென்ற மாயாண்டி சுவாமிகள், கிணற்றில் இருந்து தானே நீரை இறைத்து துரையிடம் கொடுத்துக் குடிக்கச் சொன்னார். எதற்குக் குடிக்கச் சொல்கிறார், ஏன் குடிக்கச் சொல்கிறார் என்று துரையின் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்தாலும், கஷ்டப்பட்டு அந்த நீரை அருந்தினார். அந்த நீர் அவரது வயிற்றுக்குள் சென்றதும், ஏதோ ஒரு சுகத்தை உணர்ந்தார் துரை. அதுவரை வயிற்றையே பிடித்துக்கொண்டு காட்சி தந்த துரை, அங்கிருந்து கையை எடுத்தார். ஆம்! அவரது வயிற்று வலி முற்றிலுமாகத் தீர்ந்தது. இப்படி ஒரு எளிமையான சிகிச்சையின் மூலம் தன் வயிற்று வலியை ஒருவர் குணமாக்குகிறார் என்றால், அவரிடம் ஏதோ அற்புத சக்தி இருக்கவேண்டும் என்று தெளிந்த துரை, சுவாமிகளை வணங்கினார்.

கண்களில் நீர் மல்க, மாயாண்டி சுவாமிகளைப் பார்த்து, தன் நன்றியைச் சொன்னார். பிறகு, "உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் சாமீ. அதிகாரத்தில் இருக்கின்ற நான் தருகிறேன். கேளுங்கள்" என்று சொன்னார்.

சுவாமிகள் அப்போது தனக்கென்று எதுவும் கேட்கவில்லை. "அதெல்லாம் வேணாம் அப்பு... நீ நல்லா இருந்தாலே போதும்" என்று சொல்லி நகர்ந்துவிட்டார். ஆனாலும் அந்த துரை, மணல்குண்டு பகுதியில் சுமார் 40 சென்ட் நிலத்தை எழுதி வைத்துவிட்டார். அந்த நிலத்தைத் தற்போது மண்பாண்டத் தொழில் செய்பவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூர் பலவேச வேளார் என்பவரின் திருக்குமாரன் குமாரசாமி. வேளார் வாழ்ந்து வந்தார். இவருடைய மனைவி அண்ணாமலையம்மாள். இந்தத் தம்பதியருக்குப் பல ஆண்டுகளாகக் குழந்தைப் பேறு இல்லை. அப்போது மாயாண்டி சுவாமிகள் தன் சீடர்களுடன் செய்துங்கநல்லூர் வந்தார். சுவாமிகளையும் அவரது திருக்கூட்டத்தாரையும் குமாரசாமி வேளார் வரவேற்று வீட்டு முற்றத்தில் கட்டிலில் உட்கார வைத்தார். இரவு சுவாமிகள் தங்கள் இல்லத்திலேயே தங்க வேண்டும் என்று தம்பதியினர் கோரிக்கை விடுத்தனர். மாயாண்டி சுவாமிகள் ஒப்புக்கொண்டார்.

பூஜைகள் முடித்து சுவாமிகள் சயனிக்கும் நேரம் வந்தது. அப்போது வீட்டு முற்றத்தில் சுவாமிகளைச் சுற்றி சீடர்கள் படுத்திருக்க,







நடுவில் கட்டிலில் சுவாமிகள் படுத்திருந்தார். இரவு 12 மணி அளவில் சுவாமிகள் திடீரென விழித்தார். உடனே 'சுவாமிகள் இருக்கின் றாரே' என்று தூங்காமல் விழித்திருந்த அண்ணா மலையம்மாளை நோக்கி, "விளக்கைச் சரி பாரம்மா என்றார். அதன்பின் "இன்றைய பொழுது விடியும் வரை தீ விழித்திரும்மா" என்று சொல்லிவிட்டு சுவாமிகள் படுத்துக் கொண்டார்.

தன்னிரவில் கொட்டோ கொட்டென்று மழை பொழிந்தது. சுவாமிகளைச் சுற்றிப் படுத்திருந்தவர்கள் அனைவரும் மழைச் சத்தம் கேட்டு எழுந்துவிட்டனர். சுவாமிகள் மட்டும் உறங்கிக் கொண்டிருந்தார். அனைவரின் உடைகளும் மழையினால் நனைந்துவிட்டன. ஆனால் மகான் படுத்திருந்த பகுதியில் ஒரு மழைத்துளியோ சாரலோ படவில்லை. அவர் உடுத்தியிருந்த வள்திரங்களும் தனையவில்லை.

திடீரென சுவாமிகள் எழுந்தார். வானத்தை அண் ணாத்து பார்த்தார். அங்கு கூடி இருந்தவர்களைப் பார்த்து, "மழை பொழிகிறதா?" என்று கேட்டார். "ஆமா சாமி. கொட்டுது" என்றனர். அதன்பின் அண்ணாமலை அம்மாள் கரத்தில் தன் கைவசம் இருந்த ஒரு மாம்பழத்தைக் கொடுத்துவிட்டு, "இதைச் சாப்பிடு. உனக்குக் குழந்தை பிறக்கும்" என்று கூறிவிட்டு, விறுவிறுவென்று வெளியே நடந்து போய்விட்டார்.

நள்ளிரவில் சுவாமிகள் அருளிய திருவாக்கு பலித்தது. அந்தப் பெண்மணிக்குப் பங்குனி உத்திரத்தன்று அழகான ஆண் குழந்தை பிறந்தது. சுவாமிகளின் நினைவாக "மாயாண்டி ராம 'சுந்தரம்' என்று அந்தக் குழந்தைக்குப் பெயர் வைத்தனர். அவர் தான் பிற்காலத்தில் சுடலையாண்டி வேளார் ஆனார். அவரின் மகன் சுவாமிநாத சிவாச்சாரியார் தற்போது சிறந்த ஜோதிட வல்லுனராக செய்துங்கநல்லூர் பகுதியில் திகழ்ந்து வருகிறார்.

செய்துங்கநல்லூர் அருகே உள்ள கருங்குளம் கிராமத்தில் ஒரு நாள் அந்தணர்கள் தெருவின் வழியாக சுவாமிகள் கோவணத்துடன் வலம் வந்துகொண்டிருந்தார். அவரை ஒருவர் தகாத வார்த்தைகளால் பேசி முதுகில் அடித்து தெருவை விட்டு வெளியில் செல்லுமாறு கூறினார். சுவாமிகள் எந்தவிதச் சலனமும் இல்லாமல் புன் முறுவலுடன் தெருவை விட்டு வேளார்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்றார். பிற்பாடு இதைக் கேள்விப்பட்ட அவருடைய பக்தர்கள் கோப முற்றனர். அடித்தவனைத் தண்டிக்க வேண்டும் சாமீ என்று ஆவேசப் பட்டனர். அதற்கு சுவாமிகள் தன் பக்தர்களைப் பார்த்து, "அவன் விதி சரி யில்லாத தால் என்னை அவமதித்துவிட்டான். அதைப் பற்றி நீங்கள் எவரும் கவலை கொள்ளத் தேவை இல்லை" என்றார்.

சுவாமியை சங்கடத்துக்கு உள்ளாக்கிய அந்த நபர் மத்தாப்பு தயார் செய்யும் வேலையில் ஈடுபட்டார். அப்போது மருந்து அரைக்கும் சமயத்தில் திடீரென அந்த மருந்து வெடித்து அதில் அவர் கை சிதிலமானது. எந்தக் கை சுவாமிகளை நோக்கி அடித்ததோ, அந்தக் கைதான் பாதிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் அவரது உடல் முழுவதும் வெண்குஷ்டம் பரவ ஆரம்பித்தது.

பின்னர் சித்த புருஷரான மாயாண்டி சுவாமி களை அடித்த காரணத்தினால்தான் தனக்கு இந்த நிலை ஏற்பட்டது என்பதை உணர்ந்த அந்த அன்பர், சுவாமிகளைத் தேடிச் சென்று அவர் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார். “என்னை மன்னிக்க வேண்டும் சுவாமி. எனக்கு ஏற்பட்ட இந்த நோயை நீக்கி அருள வேண்டும்" என்று கண்ணீர் மல்க மன்றாடி வேண்டினார். சுவாமிகளும் மனமிரங்கி அவருக்கு வந்த நோயை நீக்கி அருளாசி வழங்கினார்.

கருங்குளத்தில் பட்டணத்துப் பிள்ளை என்கிற மனநலம் பாதிக்கப்பட்ட அன்பரை விலங்கிட்டு, தனியாக ஒரு அறையில் வைத்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியைத் தன் ஞான திருஷ்டி மூலம் அறிந்தார் சுவாமிகள். உடனே அவர் அந்தத் தெருவில் அமர்ந்து உணவருந்தினார். பின் நேராக அந்தப் பட்டணத்துப் பிள்ளை வீட்டுக்குச் சென்றார்.

சுவாமிகள் ஒருவர் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார் என்றதும், அவரை அன்புடன் வரவேற்றார்கள். அந்த அன்பரைப் பார்க்க வேண்டும் என்கிற தனது விருப்பத்தை வீட்டில் உள்ளவர்களிடம் தெரிவித்தார் சுவாமிகள். அதற்கு அந்தக் குடும்பத்து உறுப்பினர்கள், "வேண்டாம் சாமீ. அவன் கடித்துவிடுவான். அவனை நீங்கள் பார்க்கவேண்டாம்" என்றனர்.

பிறகு, எவரது பதிலையும் சுவாமிகள் பொருட்படுத்தவில்லை. தன் தீர்மானத்தில் இருந்து அவர் நழுவவில்லை. மீண்டும் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள், "அவனிடம் போகா தீங்க சாமீ. வேண்டாம் சாம்... ஏதாவது ஏடா கூடமாகச் செய்துவிடுவான்" என்று கெஞ்சலுடன் சொன்னார்கள்.

அங்கிருந்த பெரியவர்களிடம், "வீட்டில் சாப்பாடு எதுவும் உள்ளதா? ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவாருங்கள்" என்று சொன்னார். சுவாமிகளின் வாக்கை இதற்கு மேல் நாம் தடுக்கக் கூடாது என்று தீர்மானித்தவர்கள், ஒரு தட்டில் சாதம் வைத்து, அதை சுவாமிகளிடம் கொண்டுவந்து கொடுத்தனர்.

சுவாமிகள் ஓரிரு உருண்டை சாதத்தைச் சாப்பிட்டார். பின் மீதியை மனநலம் பாதிக்கப்பட்ட பட்டணத்துப் பிள்ளையின் வாயில் தானே ஊட்டினார். பின் அவரது உடம்பு முழுவதும் தடவிக் கொடுத்து உச்சி முகர்ந்தார். அதுவரை முகத்தை இறுக்கமாக வைத்திருந்த பட்டணத்துப் பிள்ளை, மெலிதாக புன்னகைக்க ஆரம்பித்தார்.

மறுநிமிடம் நிகழ்ந்ததுதான் ஆச்சரியம். அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவரும் காணுமாறு பிள்ளையின் கையில் மாட்டப்பட்டிருந்த இரும்பு விலங்கு தெறித்து உடைந்தது. சித்தம் தெளிந்து எழுந்த பட்டணத்துப் பிள்ளை, சுவாமிகளின் கால்களைப் பற்றி அணைத்து கண்ணீர் ததும்ப வணங்கினார். அந்தக் குடும்பமே சுவாமிகளை வாயார வாழ்த்தியது.

சுவாமிகளின் ஆசி பெற்ற பலரும் இப்போது தங்கள் குடும்பத்துடன் ஆழ்வார்திருநகரியில் நலமுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி அழகியமணவாளபுரம் கிராமத்தில் குலாலர் சமுதாயத்திர்க்கு பாத்தியப்பட்ட கட்டிக்குளம் சூட்டுக் கோல் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் தினம்தோறும் ஒரு கால் பூஜையும் அனைத்து விழாக்கால பூஜையும், ஆடி மாதம் மாயாண்டி சுவாமிகளின் அவதார தினம் மற்றும் புரட்டாசி மாதம் நவராத்திரி கேட்டை நட்சத்திரத்தில் சுவாமிகள் குருபூஜை விழாவும் ஆழ்வார்திருநகரியில் நடைபெறறு வருகிறது. மேற்படி மடாலயம் சுமார் 126 ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிகள் இங்கு தங்கியிருந்து தனது சித்து மகிமையால் பல்வேறு அற்ப்புதங்களை நிகழ்த்தி பக்தர்களை தன்வசப்படுத்திய அருளாளர், மேற்படி மடாலயம் மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருப்பதால் அதனை முழுமையாக எடுத்து திருப்பணி நடத்த வேண்டியிருப்பதால் இந்த திருப்பணியை சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் அறக்கட்டளை என்ற பெயரில்

ஆழ்வார்திருநகரியில் உள்ள ஸ்ரீமாயாண்டி சுவாமிகள் ஆலயத்தில், இவரது சித்தரின் ஐம்பொன் சிலை2 பிரதிஷ்டை ஆகி உள்ளது. தற்போது மடாலயம் கருங்கல் கட்டுமான திருப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் 95 வது குருபூஜை விழா 28ந்தேதி ஞாயிறு அன்று நடை பெறுகிறது.

இந்தக் கோயில், நெல்லைதிருச்செந்தூர் மெயின் ரோட்டில் ஆழ்வார்திருநகரியில் இறங்கி, அதே திருச்செந்தூர் சாலையில் அரை பர்லாங் நடந்து சென்றால் அடையலாம்_9487898346



தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி

கட்டிக்குளம் அருள்மிகு சூட்டுக்கோல் சித்தர்

# தவத்திரு.ஸ்ரீமாயாண்டி சுவாமிகள்

## 95வது ஆண்டு குருபூஜை விழா

**நாள்: 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை**

பக்தக்கோடி பெருமக்கள் அனைவரும் வருக மகாசித்தர் அருள் ஆசி பெறுக

**என்றும் இறை பணியில்**

க.சேகர், அ.மாயாண்டி, க.பரமசிவன், ரா.சுப்பிரமணியன், மா.முத்துக்குமாரசாமி, சு.அருணாச்சலம், மா.முருகேசன், ஆ.கணேசன், மா. சரவணன், கோ.மாயாண்டி. கோ. முருகன், கோ.ராமகிருஷ்ணன், செ.முத்துராமலிங்கம், செ.அண்ணாமலை, வே.மாயாண்டி, க.சரவணன், ரா.முருகேசன், ச.சுப்பையா, ப.ஆனையப்பன், மு.சக்திபாலன், மா.முருகேசன், ச.இசக்கிமுத்து, ரா.சிவகுமார், ம.கடற்கரைமுருகன்,

**இளைஞர் அணி:** தி. மகேஷ், சே.விக்னேஸ்வரன், மா.ராம்குமார். சு.ஜெய்கணேஷ், ச.சாய்சதீஷ், ச.சுரேந்திரன், ஆ.கண்ணன்,

SOOTTUKKOLE MAYANDI SIDDHAR ARAKKATTALAI
Indian Overseas Bank - Alwarthirunagari - 628 612.
Account No : 335002000000154
IFSC : IOBA0003350
Soottukkole Mayandi Swamy : GPay -78718 98346
Contact : 94878 98346 | 76395 91490 | 85087 43695



மடாலய கருங்கல் கட்டுமான திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. பக்தகோடி பெருமக்கள் அனைவரும் பணமாகவோ, பொருளாகவோ உழைப்பாகவோ ஏதாவது ஒருவழியில் கருங்கல் கட்டுமான திருப்பணிக்கு உதவிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

# சிந்தலக்கரை வெட்காளியம்மன்

பாரம்பரியமிக்க வரம் அருளும்புண்ணிய சக்தி பீடங்களில் ஒன்றுதான் சிந்தலக்கரை அருள் தரும் ஸ்ரீகாளி பராசக்தி தவசித்தர்பீடம். இந்த புண்ணிய பூமியின் தாய் ஸ்ரீகாளி பராசக்தி. அவளே ஸ்ரீவெட்காளியம்மன் என்றும் அழைக்கப்படுகிறாள்.

எப்படி வேண்டுமானாலும் விசித்திரம் நடக்கும் என்பதற்கு சாட்சியாக சிந்தலக்கரையில் மூவுலகையும் ஆளும் அன்னையான ஸ்ரீகாளி பராசக்தி வந்து அமர்ந்து தன் பாலகன் ஸ்ரீராம மூர்த்தி சுவாமிகளின் வடிவில் பல அற்புதங்கள் புரிந்து உலக உயிரினங் கள் அனைத்திற்கும் அருள் மழை பொழிகின்றாள்.



இந்த பீடம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பெருங்கவி பாரதி பிறந்த எட்டையாபுரம் அருகில் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள் ளது.

சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவில் ஒரு புனித சக்தி பீடமாகும். இங்கு 42 அடி உயரஅளவில் வெட்காளியம்மன் திரு உருவ சிலை அமைந்துள்ளது. திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட மகாவிஷ்ணுவின் அருள் காட்சியினை 72 அடிநீளத்தில் ராஜநாகத்துடன் மகா விஷ்ணுவின் திருவுருவ சிலை இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

நினைத்த வரம் கொடுப்பாள் காளி அனைவரும் தவறாமல் சென்று வணங்கி அருள்பெற வேண்டுகிறோம்.

# ஒரே கோவிலில் அருள் பாலிக்கும் ஐந்து தட்சிணாமூர்த்திகள்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் அருள்பாலிக்கும் பஞ்ச தட்சிணாமூர்த்திகள்!

திருநெல்வேலி மாநகரின் மத்தியில் அமையப் பெற்றுள்ளது ஸ்ரீ காந்திமதி அம்பாள் உடனுறை சுவாமி ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோவில்.

இந்த கோவிலில் ஐந்து தட்சிணா மூர்த்தி சன்னதிகள் அமையப் பெற்றுள்ளது.

அவைகள்...

1. சுவாமி நெல்லையப்பர் சன்னதி கோஷ்டத்தில் உள்ள தெற்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி.

2. சுவாமி நெல்லையப்பர் கோவில் தெற்கு பெரிய பிரகாரத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி.






3. திருக்கோவில் பொற்றாமரை குளத்தின் மேற்கு கரையில் உள்ள கால் மாற்றி அமர்ந்த தட்சிணாமூர்த்தி.

4. சுவாமி நெல்லையப்பர் கோவில் கிழக்கு பெரிய பிரகத்தில் யாக சாலை எதிரே உள்ள வன்னியடி தட்சிணாமூர்த்தி.

5. சுவாமி நெல்லையப்பர் கோவில் நுழைவாயிலின் வடபுறம் உள்ள முருகன் சந்நிதியில் காட்சிதரும் தெற்கு நோக்கிய தட்சிணா மூர்த்தி.

இந்த பஞ்சதட்சிணா மூர்த்திகளையும் ஒரே கோவிலில் நாம் கண்டு வணங்க முடியும் என்பது வேறு எங்கும் இல்லாத சிறப்பம்சம் ஆகும்.

# வியர்க்கும் முருகன்



திருச்செந்தூர் முருகன் விக்ரகம் மிக சூடாக இருக்கும். சந்தனம் அரைத்து சிறிதும் தண்ணீர் இல்லாதவாறுநன்கு வடிகட்டி அதை விக்ரகம் மீது முழுதாக தடவி பூசி மூடிவிடுவர். மாலை சந்தனம் வழிக்கும்போது நிறைய தண்ணீர் இருக்கும்ஞ்சந்தனம் சொத சொத வென சிலை முழுக்க வழிந்தோடும்.

வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டபோது திருநெல்வேலி மாவட்ட கலக்டராக இருந்த லூசிங்டன் பிரபு என்பவர் திருச்செந்தூர் வந்திருந்தார். முருகனுக்கு நடைபெறும் வழிபாடுகளை கண்டார்.

இறைவனுக்கு அளிக்கப்படும் சோடச உபசாரம் எனப்படும் பதினாறு வகை உபசாரங்களுள் விசிறி வீசுதலும் ஒன்று. சுப்ரமணிய சுவாமிக்கு அர்ச்சகர் வெள்ளியிலான விசிறியை வீசுவதை கண்டார் லூசிங்டன். அங்கிருந்த பக்தர்களிடம், “உங்கள் கடவுளுக்கு வியர்க்குமோ? விசிறியை வைத்து வீசுகிறீர்கள்..?” என்று கேலி செய்தார்.

அர்ச்சகர், “ஆம் எங்கள் சண்முகனுக்கு வியர்க்கும்..” என்று கூறி, முருகன் அணிந்திருந்த மாலையையும் கவசத்தையும் அகற்றி காண்பித்தார். முருகன் திருமேனியில் திட்டு திட்டாக வியர்வை அரும்பியிருந்ததை கண்டு வியந்தார் லூசிங்டன்.

வீடு திரும்பிய கலக்டருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர் மனைவி திடீரென கடுமையான வாயிற்று வலியினால் துடித்தார். சூலை நோய் என்பார்கள். இந்நோய் கண்டவர்களுக்கு நெருப்பு கங்குகளை விழுங்கியதை போல வயிறு வலிக்கும்.

என்ன செய்வதென்று தெரியவில்லை. தனக்கு கீழே பணியாற்றிக் கொண்டிருந்த கடவுள் நம்பிக்கை மிகுந்த முருக பக்தர் ஒருவரிடம் நடந்ததை கூறி, என்ன செய்தால் உங்கள் முருகனின் கோபம் தணியும் ? என்று கேட்டார்.

அவர் கூறிய உபாயத்தின்படி, உடனே திருச்செந்தூர் ஓடோடிச் சென்று “முருகப் பெருமானே, என்னை மன்னித்து என் மனைவியை காப்பாற்று. அவள் படும் துயரைக் கண்டு என்னால் சகிக்கமுடியவில்லை. உன் ஆலயத்திற்கு தேவையான பொருட்களை நான் என் சொந்த செலவில் வாங்கித் தருகிறேன்” என்று மனமுருக வேண்டிக்கொள்ள, எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் முருகப் பெருமானின் தனிபெருங்கருணையினால் லூசிங்டன் பிரபுவின் மனைவிக்கு இருந்த வயிற்று வலி அதிசயிக்கத்தக்க வகையில் உடனடியாக நீங்கியது.

முருகப் பெருமானின் கருணையை எண்ணி வியந்த லூசிங்டன் பிரபு, சொன்னபடியே வெள்ளிப்பாத்திரங்களை கோவிலுக்கு காணிக்கை கொடுத்தார். அவற்றில் ‘லூசிங்க்டன் 1803 என்று முத்திரை பொறித்துள்ளார்.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்.

S.ஆனந்தகிருஷ்ணன் & கோ.,

மரம், ஓடு வியாபாரம் & சா மில்



எங்களிடம் ஒரிஜினல் (பர்மா) ஆஸ்திரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு மரம், மருதமரம், நாவல்மரம், நல்லகலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ் மரம், ரோடு வாகை மரம் பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது.



SAK மொத்த மர வியாபாரிகள் அணுகவும். SAK

சீனியப்பா குரூப்ஸ்









S. ஆனந்தகிருஷ்ணன்

செல் : 98424 68256

மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்...

A. குணா (எ) குணசீலன்

செல் : 98428 68256

சீனியப்பா லாட்ஜ் A/c, SAK திருமண மஹால்

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை.